அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை: 29/2011(II)

எனது இலக்கம்: EST-3/DICIP/06/0166
அரசாங்க நிர்வாக மற்றும்
முகாமைத்துவ அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2017.02.07

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாண பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,

**தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24:3 ஆம் உட்பிரிவின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட அலுவலர் முறையான ஒழுக்காற்று விசாரணையின் போது குற்றமிழைத்தவராகும் சந்தர்ப்பத்தில் தண்டனை வழங்குதல்**

தாபன விதிக்கோவையின் II ஆம் வகுதியின் XLVIII ஆம் அத்தியாயத்தின் 24:3 ஆம் உப பிரிவிற்கு 24:3:14 மற்றும் 24:3:15 ஆம் உப பிரிவுகள் உள்ளடக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள 2011.12.21 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/2011 மற்றும் அச் சுற்றறிக்கையின் திருத்தங்கள் வலுவிலிருக்கக் கூடிய திகதியை குறிப்பிட்டு வெளியிடப்பட்ட 2012.08.28 ஆந் திகதிய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை 29/2011(I) இன் பால் உமது அவதானத்தை கொண்டுவருகின்றேன்.

02. அச் சுற்றறிக்கையினை இரத்துச் செய்வதற்காக 2017.01.17 ஆந் திகதியன்று நடபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது தீர்மானம் எடுக்கப்பட்டது.

03. அதற்கிணங்க, ஒழுக்காற்றுக் கட்டளையொன்றுக்கு உட்பட்ட அரசாங்க அலுவலர்களிடமிருந்து அச்சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப அறவிடப்பட்டுள்ள பணத்தினை அவ் அலுவலர்களுக்கு மீள வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

ஒப்பம்/ ஜே.ஜே. ரத்னசிரி
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு